1978 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதற்கு முன்னதாகவே நான் சொல்லிவிட்டேன். கலந்து ஆலோசித்து முடிவெடுக்கிறேன் என்று.

அணைக்கட்டு கிராமத்தில் குடிநீர் வழங்கல்.

* வினு எண் 91—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அணைக்கட்டுத் தொகுதி அணைக்கட்டு கிராமத்தில் குடிநீர் பற்ருக் குறை இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) அந்தப் பற்ருக்குறையைப் போக்க (T.W.A.D.) மூலம் கந்தநேரியில் வெட்டப்பட்டுள்ள கிணற்றிலிருந்து குழாய் மூலம் குடிநீர் கொண்டுவந்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அரசு கவனத்துக்குக்கொண்டு வரப்படவில்லை.

(ஆ) இவ்வினு எழ இடமில்லை.

[முற்பகல் 9-50]

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, மேற்படி அணைக்கட்டு கிராமம் அணைக்கட்டு என்ற பெயரைத் தாங்கி இருந்தாலும் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாது இருக்கிறது. அருகாமையில் உள்ள கந்தநேரி கிராமத்தில் அரசு செலவில் கிணறு வெட்டி, பம்ப் செட் டுவாட் மூலம் போடப்பட்டு இருக்கிறது. அந்தக் கிணற்றுத் தண்ணீரைப் பயன்படுத்தி அந்த கிராமத்திற்கும் அந்தக் குடிநீர்த் திட்டத்தை எக்ஸ்டென்ட் செய்யவேண்டும் என்று அந்த வாரியத்திடமும் தெரியப்படுத்தி இருக்கிறோம். அதை அரசாங்கமும் பரிசீலித்து, அந்தப் பகுதி மக்களின் குடிநீர் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என்று தயவோடு கேட்டுக் கொள்கிறேன், வினு வாகக் கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. எஸ்.இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அணைக்கட்டு, சின்ன அணைக்கட்டு, வீரப்பன்பட்டி, அணைக்கட்டுக் காலனி, ஒட்டர் காலனி என்ற 5 குடியிருப்புகளும் 6, 4, 6, 3, 3 என்ற பிரிவில் வருகிறது. இந்த அரசு 1, 2 பிரிவில் உள்ள கிராமங்களுக்கு 31-3-79-க்குள்ளாக குடி தண்ணீர் கொடுத்து வீடுவதாக முடிவு எடுத்துள்ளது. அதற்குப் பின்னல் 3-வது பிரிவு, 4-வது பிரிவு என்று எடுத்துக் கொள்ளப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும் அணைக்கட்டு தொகுதியில் உள்ள பிரிவு 2-ஐச் சேர்ந்த, அதாவது 1 கிலோ மீட்டருக்குள் தண்ணீர் இருந்தாலும்-நாட் பாட்டபிள்-உப்புத் தண்ணீராக இருக்கின்றவை-வல்லாண்டரமும், பற்றும், அரிசன காலனி, கந்தநேரிக்கு அருகாமையில் உள்ள

பாலாற்றின் கரையோடு ஒரு வடி கிணறு தோண்டி அதன் மூலம் மேற்படி கிராமத்திற்குக்குடி தண்ணீர்த் திட்டம் அமைத்து குடிநீர் வழங்க முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா அணைக்கட்டு கிராமம் பற்றியது. திரு. மு. ஆறுமுகம்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, அணைக்கட்டுத் தொகுதியில் மட்டும் அப்படி இல்லை. பொதுவாகத் தமிழ்நாட்டிலே தண்ணீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. (மணியடிக்கப்பட்டது)

அரசு வாகனங்களுக்கு டீசல் இயந்திரங்கள்

* வினா எண் 92—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

அரசு அலுவலகங்களில் உபயோகப்படுத்தும் ஜீப், அம்பாஸிடர் வாகனங்களுக்குச் சிக்கன நடவடிக்கையாக டீசல் இயந்திரங்கள் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம். 10. பெட்ரோல் ஜீப்களை, டீசல் வாகனங்களாகச் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மாற்றுவதற்கான முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான உத்தரவை அரசு 9-8-78-ல் பிறப்பித்துள்ளது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, அந்தத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்களுக்கும், தாலுகா அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா? அதேபோல், பெட்ரோல் டார்கட் இன்டார்டியூஸ் செய்து இருக்கிறார்கள். அதை இன்கீரீஸ் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, பெட்ரோலின் விலை உயர்வு காரணமாக டீசல் பயன்படுத்த ஜீப்புகள், அம்பாசிடர் போன்ற அரசு வாகனங்களைக் கொண்டு வருவதால் அதிகச் சிக்கனச் செலவு ஏற்படும் என்ற அடிப்படையில்தான் முதல் படியாக ஆய்வின் அடிப்படையில் 10 ஜீப்புகளை டீசலுக்கு மாற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதனுடைய செயல்முறையைப் பார்த்துப் பின்னர் மற்ற ஜீப்புகளையும் டீசலாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 10 மணிக்குள் முடிக்க வேண்டும். இல்லையென்றால், நான் மீதியுள்ளவற்றை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடச் சொல்லும் நிலைமை ஏற்படும்.